பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 06 புதன்கிழமை 22.09.2021 கதிர் 185

# மேலும் 491 பேர் சிக்கினார்கள்!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 491 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் 55 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2

# யாழ். பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு ஒக். 7 நிகழ்நிலையில் நடத்த மாணவர்களும் இணக்கம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்புவிழாவின்இரண்டாவதுபகுதிஅறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07ஆம் திகதி நிகழ்நிலை வாயிலாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் இதனைத் தெரிவித்தார். 2

# வல்வெட்டித்துறை நகர சபையின் ஆட்சியை இழந்தது கூட்டமைப்பு!

## சுயேச்சைக் குழு உறுப்பினர் செல்வேந்திரா தலைவராகத் தெரிவு



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா இன்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரு மேலதிக வாக்கால் அவர் வெற்றி பெற்றுள்ளார். 2

# மன்னார் நகர சபைக்கான தவிசாளர் தெரிவு 29 இல்!

(ந.லோகதயாளன்)

மன்னார் நகர சபைக்கான தலைவர் தெரிவு எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ளது என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் அரச இதழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதிகார வரம்பை மீறித் தவறான கடிதம் வழங்கியதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டமையால் முன்னர் பதவி வகித்த மன்னார் நகர சபைத் தலைவர் பதவி வடக்கு மாகாண ஆளுநரால் வெறிதாக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே எதிர்வரும் 29 2

# மூத்த ஊடகவியலாளர் அந்தோனி மார்க் கொரோனாத் தொற்றால் காலமானார்!



மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரும் தமிழ்த் தேசியப் பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க் தனது 80 ஆவது வயதில் நேற்றிரவு முல்லைத்தீவு வைத்தியசாலையில் காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பீ.ஏ.அந்தோனி மார்க் 2

# வவுனியாவில் மேலும் நால்வர் கொரோனாத் தொற்றால் சாவு!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 69 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், 4 பேர் மரணமடைந்துள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் 2

# 14 வயது சிறுவன் சுட்டுக்கொலை: பிரதான சந்தேகநபர் சிக்கினார்!

அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பிரதேசத்தில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற குழப்பம் ஒன்றின்போது 14 வயது சிறுவன் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மற்றுமொரு நபருடன் காட்டுப்பகுதியொன்றில் தலைமறைவாகி இருந்த பிரதான சந்தேகநபர், வீரகெட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

பிரதான சந்தேகநபரைக் கைதுசெய்தபோது, கொலைக்காகப் பயன்படுத்தப்பட்டது எனக் கருதப்படும் துப்பாக்கி 2

# குருநகர் கடற்பகுதியில் 350 கிலோ மஞ்சள் மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் 350 கிலோ 650 கிராம் மஞ்சள் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

குருநகர் ஐந்து மாடி கட்டடத்தொகுதிக்கு அண்மித்த கடற்பரப்பில் கைவிடப்பட்டிருந்தபடகொன்றில்இருந்தேமஞ்சள்மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவை மீட்கப்பட்டன.

RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir

வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில்
காலைக்கதிர் பத்திரிகையில்
RADIANT DAWN
A Sunday Supplement பக்கத்திற்கு தங்கள்
பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை
கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வைக்கவும், மறக்காமல்
மாணவர்களின் முழுப் பெயர், பாடசாலை, தரம், தொடர்பு
இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழ்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமளிப்பு விழாத் தொடர்பில் தீர்மானங்களை இயற்றுவதற்காக இன்று நண்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாக்குழுவின் விசேட கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு விபரிக்கும்போதே கலாநிதி கே. சுதாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவரிப்பின் போது பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ்உமேஸ் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் 07 ஆம், 08 ஆம், 09 ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என்றும், நாட்டில் இப்போதுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின் அதனை ஒக்ரோபர் 07ஆம் திகதி நிகழ் நிலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவதற்குச் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கவில்லை. இதனால் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி மாணவர்களுக்கான பட்டங்கள் உறுதிப்படுத்தப்படுத்துவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

நிகழ்நிலைப் பட்டமளிப்புக்குத் தங்கள் இணங்கவில்லை என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதையடுத்து துணைவேந்தரின் வேண்டுகோளுக்கமைய மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் உள்வாங்கி பட்டமளிப்பு விழாக் குழுவின் விசேட கூட்டம் இன்று கூட்டப்பட்டிருந்தது.

கூட்டத்தின் முடிவில் எதிர்வரும் ஒக்ரோபர் 07ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதி செய்வது என்றும், தற்போதைய நிலைமைகள் சீரடைந்ததும் மரபு ரீதியான பட்டமளிப்பு வைபவத்தை மிகக் குறுகிய காலத்தினுள் நடத்துவதற்கான திகதியை முன்மொழிவதற்கென மாணவர் பிரதிநிதிகளையும், பல்கலைக்கழக அலுவலர்களையும் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழுவினால் முன்மொழியப்படும் திகதிகளில் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கென சுகாதார சேவைகள் திணைக்கள அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் இதே குழு மேற்கொள்ளவுள்ளது என்றும் கலாநிதி கே. சுதாகரன் மேலும் கூறினார்.

## மூத்த.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

குரலற்ற மக்களின் குரலாகவும் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகவும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்ததோடு, பல்வேறு போராட்டங்களையும் தலைமை தாங்கி முன்னெடுத்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மன்னார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதி புதிய தலைவர் தெரிவு இடம்பெறவுள்ளது.

மன்னார் நகர சபையில் தற்போது அங்கம் வகிக்கும் 21 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்குத் தலா 7 ஆசனங்களும், ஏனைய கட்சிகளிடம் உதிரிகளாக 7 ஆசனங்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 69 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் நேற்று 4 பேர் மரணமடைந்துள்ளனர். நெடுங்கேணி பகுதியில் ஆண் ஒருவரும் (வயது 39), பட்டக்காடு பகுதியில் ஆண் ஒருவரும் (வயது 49), பம்பைமடு காப்பகம் ஒன்றில் ஆண் ஒருவரும் (வயது 79), உக்குளாங்குளம் பகுதியில் பெண் ஒருவரும் (வயது 71) இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## வல்வெட்டித்துறை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ரெலோ உறுப்பினர் சதீஸ் 8 வாக்குகளையும், சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிட்ட செல்வேந்திரா 9 வாக்குகளையும் பெற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பான உப தவிசாளர், சுயேச்சைக் குழுவுக்குச் சார்பாக வாக்களித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு அமர்வு இன்று முற்பகல் 10 மணிக்கு நகர சபை மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது.

இன்றைய அமர்வு கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா அண்மையில் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய தலைவர் தெரிவு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. சுயேச்சைக்குழு 4 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. என்பன தலா 2 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஓர் உறுப்பினர்களையும் கொண்டுள்ளன.

## 14 வயது.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான நபர் வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வீரகெட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மேலும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டதிவிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 76 ஆயிரத்து 636 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி பயணித்த குற்றச்சாட்டில் 160 வாகனங்களில் வந்த 324 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.


வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண்
உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு –
076 740 3814

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவின் புதிய நகர்வு

புலம்பெயர் தமிழர்களைப் பேச்சுக்கு அழைக்கும் விதத்தில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை முன்னேற்றகரமான நகர்வு என்று குறிப்பிட்டுள்ள உலகத் தமிழர் பேரவை, திடீரென முற்றிலும் தலைகீழாக மாறி உள்ள இலங்கை ஜனாதிபதியின் சிந்தனைப் போக்குக்குக் காரணம் என்ன என்று சந்தேகமும் கேள்வியும் எழுப்பியிருக்கின்றது.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த முடிவை தாங்கள் வரவேற்கின்றனர் என உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் குறிப்பிட்டிருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

ஆனாலும், ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் உலகத் தமிழர் பேரவை போன்ற பல புலம்பெயர் அமைப்புகளைத் தங்களது முன்னைய பாணிக் கெடுபிடி போக்கில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்து, இந்த பிரச்சினைகளில் தீண்டத் தகாத தரப்பு என்பதுபோல அறிவித்து ஒதுக்கியிருந்தார் ஜனாதிபதி கோட்டாபய.

இப்போது அத்தகைய புலம்பெயர் தரப்புகளையும் அவர் பேச்சுக்கு அழைக்கின்றார். இந்த இரண்டுக்கும் இடையில் – இந்த விந்தையான மாற்ற நிகழ்வுகளுக்கு இடையில் – இடம்பெற்ற செல்நெறிப் பிறழ்வுகள் யாவை எனப் புலம்பெயர் தமிழர்கள் சார்பில் கேள்வி எழுப்பப்படுவது நியாயமானதே.

இலங்கையின் யுத்த முடிவுக்குப் பின்னர், இப்போதைய ஜனாதிபதிக்கு முன்பு பதவியில் இருந்த மைத்திரிபால சிறிசேன வுடன் உலகத் தமிழர் பேரவை சமரச முயற்சியாக லண்டனில் இரண்டு தடவைகளும் பெர்லினில் ஒரு தடவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தது.

அப்படி இருந்தும் தாம் பதவிக்கு வந்ததும் அந்த அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகளாகப் பிரகடனப்படுத்திய ஜனாதிபதி கோட்டாபயவுக்கு, அந்தத் தரப்புக்கள் இப்போது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் நியாயமான பங்குதாரர்களாகத் தோன்றத் தொடங்கியுள்ளனர். இது நல்லதொரு திருப்பம்தான்.

களத்தில் – தமிழர் தாயகத்தில் – மக்களின் பிரதிநிதிகளாக இருப்போருடன் தீர்வுக்கான எந்த ஊடாட்டத்தையும் முன்னெடுக்காத கோட்டாபய ராஜபக்ஷவின் அரசுக் கட்டமைப்பு, அவர்களைத் தாண்டி, புலம்பெயர் சமூகத்துடன் உறவை மேற்கொள்ள முயற்சிப்பது சந்தேகத்தைத் தராமல் இல்லை. பல்வேறு கேள்விகளையும் கூட அது எழுப்பி நிற்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனநாயகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரமுகர் என்றாலும், அவர் முழு அரசியல்வாதி அல்லர். இராணுவப் போக்குப் பிரகிருதிதான். இராணுவக் கட்டமைப்புப் பாணியில்தான் அவரது அரசியல் தலை மைத்துவ செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற அரசியல் பதவியில் இருந்தாலும் அவரைச் சூழ வியூகம் வகுத்து நிற்பவர்கள் இராணுவப் பாணித் தரப்புகளே. அந்தத் தரப்புகளிடம்தான் உண்மை அதிகாரம் இன்று தங்கி நிற்கின்றது.

இவ்வாறு புலம்பெயர் தரப்புகளுடன் பேச்சு நடத்தும் அவரது தீர்மானம், அந்த இராணுவ தரப்புக்களைத் தாண்டி வந்ததா என்ற நியாயமான சந்தேகமும் உண்டு.

இன்று இரவு இலங்கை நேரப்படி ஒன்பது முப்பது மணிக்கு நியூயோர்க்கில் ஐ.நா. தலைமையகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றுகிறார். அந்த உரையில் இத்தகைய சமரச பேச்சுக்கான அழைப்பு தொடர்பில் மேலதிக அறிவிப்பு கள் எதையும் அவர் கோடி காட்டக்கூடும். பொறுத்திருந்து பார்ப்போம்.

# மதுபானசாலைகள் திறப்பு விசாரணைகள் வேண்டும்

## மஹிந்த அமரவீர வலியுறுத்து



மதுவரி ஆணையாளருக்குத் தெரியாமல் மதுபானசாலைகள் திறக்கப்பட்டிருந்தால் அது பாரிய பிரச்சினை எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர, இந்த விடயம் தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் நிலையில் மதுபான சாலைகளை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மதுபான சாலைகள் திறப்பதற்கு அரசாங்கமும் அனுமதி வழங்கவில்லை. சுகாதாரப் பிரிவினரும் அனுமதி வழங்கவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது. அப்படியென்றால்யாருடைய உத்தரவில் திறக்கப்பட்டன என்பது தொடர்பில் பார்க்க வேண்டும்.

அத்துடன்தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும்நிலையில் மதுபான சாலைகளை திறந்து வைப்பது பொருத்தமான விடயமாகத் தெரியவில்லை. அப்படியானால் அரச ஊழியர்கள் தொடர்ந்து வீடுகளில் தான் இருக்க வேண்டிவரும்.

கொவிட் காரணமாக அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் வரையறைகளை விதித்திருக்கும் நிலையில் மதுபான சாலைகளைத் திறக்கவேண்டிய தேவையில்லை.

அவ்வாறு இருந்தும் மதுபானசாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என நிதி அமைச்சிடமும் விடயத்துக்கு பொறுப்பான அதிகாரிகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இந்த நடவடிக்கை அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கு மேற்கொள்ளப்பட்டதா, மதுபானசாலை உரிமையாளர்களின்தேவைக்காக இடம்பெறுகின்றனவா அல்லது அவர்களிடம் மதுபானம் அருந்தும் அரச அதிகாரின் விருப்பத்துக்கமைய இடம்பெற்றதா என்பது தொடர்பாக ஆராய வேண்டும். – எனக் கூறினார்.

# யாழ். பல்கலைக் கழக சட்டத்துறை புதுமுக மாணவர்கள் அறிமுக நிகழ்வு



யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின், சட்டத் துறையில் பயில்வதற்காக 2019 / 2020 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை), முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றது.

சட்டத் துறைத் தலைவர் திருமதி தூனி சயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப் பீடாதிபதி கலாநிதி கே.சுதாகர், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி. ராஜ்உமேஷ், பதில் நூலகர் திருமதி ச. கல்பனா ஆகியோர் கலந்துகொண்டு புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினர்.

மாணவர் ஒழுக்காற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் கே. வேலாயுதமூர்த்தி, சட்டத் துறை விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள், புதுமுக மாணவர்கள் உட்பட பலர் நிகழ்நிலை ஊடாகக் கலந்து கொண்டனர்.

# பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் சமர்ப்பிப்பு

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழிகாட்டல்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒப்படைக்கப்பட்டன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். தரம் 5 வரையான ஆரம்ப வகுப்புகளை கொண்ட பாடசாலைகளைத் திறப்பது தொடர் பான வழிகாட்டல்கள் அதில் அடங்கி யுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரிஷாத்தின் மறியல் தொடர்ந்தும் நீடிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் எதிர் வரும் 05 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விளக்கமறியல் உத்தரவை நீடித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி, கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரிக்கு நிதியுதவி வழங்கினார் எனச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையில் ரிஷாத் பதியுதீன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# மூன்றாவது முறையாகப் பிரதமராகிறார் ஜஸ்டின் ட்ரூடோ!



கனடா நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காத நிலையிலும், தனது பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

ட்ரூடோவின் லிபரல் கட்சி அதிகாலை 1:40 நிலவரப்படி மக்களவையில் உள்ள 338 இடங்களில் 156 இடங்களில் வெற்றிபெற்று முன்னிலைப் பெறுகின்றது. 2019ஆம் ஆண்டின் கடைசி வாக்கெடுப்பில் இருந்து சிறிது மாற்றம் ஏற்பட்டது. எனினும் பெரும்பான்மைக்கு இது போதுமானதல்ல.

முக்கிய எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சிக்கு 122 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. அவர்கள் கடந்த முறை வென்றதை விட கூடுதலாக ஒன்று.

இந்திய வம்சாவளியைச் ஜக்மீத் சிங் தலைவராக இருக்கும் நியூ டெமாக்ரெட் கட்சி 27 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 338 இடங்களில் பெரும்பான்மை பெற 170 இடங்கள் தேவைப்படும். கடந்த தேர்தலில் ட்ரூடோவின் லிபரல் கட்சிக்கு 155 இடங்களே கிடைத்தன.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காததால், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்தார். 2023ஆம் ஆண்டு அடுத்த தேர்தல் நடைபெறவேண்டிய நிலையில், அங்கு முன்கூட்டியே தேர்தல் அறிவிக்கப்பட்டது. கனடாவில் கடந்த இரண்டாண்டுகளில் நடந்திருக்கும் இரண்டாவது நாடாளுமன்றத் தேர்தல் இதுவாகும்.

மேலும் இரண்டு ஆண்டுகள் பதவிக்காலம் இருக்கும்போது தேவையற்ற வகையில் முன்கூட்டியே தேர்தல் நடத்துவதாக ஜஸ்டின் ட்ரூடோ மீது எதிர்க் கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தன.

# 6 லட்சத்து 35 ஆயிரம் மக்கள் ஆப்கானில் இந்த வருடம் இடம்பெயர்வு

ஆப்கானிஸ்தான் நாட்டிலிருந்து இந்த ஆண்டு மட்டும் 6லட்சத்து 35 ஆயிரம் மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் மனிதநேய விவகாரங்களுக்கான கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில், 'ஆப்கானிஸ்தானில் 2021ஆம் ஆண்டில் ஏற்பட்ட வன்முறை, சண்டை, வறுமை ஆகியவற்றால் இது வரை 6லட்சத்து 35 ஆயிரம் மக்கள் அந்நாட்டை விட்டு வெளியேறி அண்டை நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துவிட்டனர்.



அதிலும் பஞ்ச்ஷீர் மாகாணத்தில் தலிபான்களுக்கும், தலிபான் எதிர்ப்புப் படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டபின் காபூல் நகரிலிருந்து மட்டும் 12ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளனர்.

இதில் காபூலில் இருந்து வெளி யேறிய மக்களில் 1,300 பேருக்கு ஐ.நா. சார்பில் உதவி வழங் கப்பட்டுள்ளது. குனார் மாகாணத்தில் இருந்து புலம்பெயர்ந்த மக்களில் 9,300 பேருக்கு ஐ.நா. சார்பில் நிவாரணப் பொருட்கள் வழங் கப்பட்டுள்ளன.

இதுதவிர உலக உணவுத் திட்டமும் உணவு பொருள்களை ஒக்டோபர் முதல் அடுத்த ஆண்டு ஜனவரி வரை வழங்க உள்ளது. மைதான் வார்தாக் மாகாணத்தைச் சேர்ந்த 63ஆயிரம் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட உள்ளன. புலம்பெயர்ந்து செல் லும் மக்களுக்கு உணவு, குடிநீர் உள்ளிட்ட உதவிகள் வழங்குவ தோடு அவர்களின் உடல்நலன் சார்ந்த உதவிகளும் அளிக்கப்படும். மருத்துவப் பரிசோதனை, கரோனா பரிசோதனை, தடுப்பூசி செலுத்துதல் ஆகிய வற்றுக்கும் அதிகமான முன்னுரிமை வழங்கப்படும். பாதக்ஸான் மாகாணத்தில் உள்ளாயாவான், ராகிஸ்தான் மாவட்டங்களில் 30இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சின்னமை தொற்று ஏற்பட்டுள்ளது. இதைத் தடுக்கவும் ஐ.நா.சார்பில் சிகிச்சை அளிக் கப்பட்டு வருகிறது' எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.



# அலெக்சாண்டர் லிட்வினென்கோவின் கொலைக்கு ரஷ்யாவே பொறுப்பு!

## ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம்

அலெக்ஸாண்டர் லிட்வினென் கோவின் படுகொலைக்கு ரஷ்ய முக வர்கள் பணிக்கப்பட்டனர் என ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.

பிரித்தானிய குடிமகனான முன்னாள் ரஷ்ய உளவாளி, கிரெம்ளின் விமர்சகர் லிட்வினென்கோ, கடந்த 2006ஆம் ஆண்டு லண்டனின் மில்லினியம் ஹோட்டலில் விம் கலந்த கிரீன் டீ குடித்து இறந்தார்.

பொலோனியம் -210 வித்தால், உயிரிழந்தார். இது அரிய கதிரியக்க பொருள் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், அப்போது நடத்தப் பட்ட பொது விசாரணையில், இந்த கொலை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினால் 'அங்கீகரிக்கப்பட்டிருக்க லாம்' என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், அவரது மரணத்தில் எந்த தொடர்பும் இல்லை என்று ரஷ்யா மறுக்கிறது.

இதனைத்தொடர்ந்து முன்னெடுக் கப்பட்ட விசாரணையில், முன்னாள் கேஜிபி மெய்க்காப்பாளர் ஆண்ட்ரி லுகோவோய் மற்றும் மற்றொரு ரஷ்ய ரான டிமிட்ரி கோவ்டுன், கதிரியக்கப் பொருளைக் கிரீன் டீ பானத்தில் கொடுத் ததாக கூறப்பட்டது. எனினும், இவர்கள் இருவரும் இந்த கொலையில் எந்த தொடர்பும் இல்லை என்று மறுக்கின் றனர்.

'லிட்விநென்கோவுக்கு விம் கொடுத்த லுகோவோய் மற்றும் கோவ்டுடன் ஆகி யோர் ரஷ்ய அரசாங்கத்தின் முகவர் களாக செயற்பட்டனர் என்று ஒரு வலு வான முதன்மை வழக்கு இருப்பதாக நீதிமன்றம் குறிப்பாக கண்டறிந்தது என ஐரோப்பிய நீதிமன்றம் கூறியுள் ளது.

லிட்விநென்கோ விலகுவதற்கு முன்பு ரஷ்ய பாதுகாப்பு சேவைகளில் பணியாற்றினார் மற்றும் பிரித்தானி யாவில் தஞ்சம் பெற்றார். அவரது மனைவி மெரினா லிட்வெனென் கோவு டன் சேர்ந்து, அவர் கொல்லப் படுவ தற்கு முன்பு அவருக்கு பிரித்தா னியா குடியுரிமை வழங்கப்பட்டது.

கிரெம்ளினின் உளவுத்துறையின் முக்கிய விமர்சகராகவும் ஊழலை அம் பலப்படுத்துவதிலும் ஈடுபட்ட லிட் வினென்கோவின் மரணத்திற்கும் தம க்கும் எந்த தொடர்பும் இல்லை என ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகின்றது.

# வர்த்தக ஒப்பந்தத்தில் இணைவது குறித்து பிரித்தானியா பரிசீலனை!



அமெரிக்கா, மெக்ஸிகோ மற்றும் கனடா இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இணைவதற்கான முயற்சிகள் தொடர்பாக பிரித்தானிய அமைச்சர்கள் பரிசீலித்து வருகின்றனர்.

இங்கிலாந்து-அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கான உடனடி வாய்ப்புக்கள் இல்லை என பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஒத்துக் கொண்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தவாரம் நியூயோர்க் மற்றும் வொஷிங்டன் டிசிக்கு விஜயம் செய்த பிரதமர், 2024 இல் அடுத்த பொதுத் தேர்தலின் போது பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை உறுதி செய்யத் தவறிவிட்டார்.

அட்லாண்டிக் டிரான்ஸ் வர்த்தகத்தை மேம் படுத்துவதற்கான மாற்றுப் பாதையாக தற்போதுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் பிரித்தானியா இணைவைத்தான் மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என மூத்த அரசாங்கப் பிரமுகர் பரிந்துரைத்துள்ளார்.

இருப்பினும் தனித்தனி பிரச்சினைகளை திருத்திக்கொண்டு பிரித்தானியா-அமெரிக்க ஒப்பந்தங்களைத் தொடர்வது மற்றொரு விருப்பமாக இருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# 5.8 ரிக்டர் அளவில் ஆஸியில் நிலநடுக்கம்!

தென்கிழக்கு ஆஸ்திரேலியாவில் 5.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மெல்போர்ன் நகரில் உள்ள கட்டிடங்கள் இடிந்து விழுந்து சேதமாகின.

விக்டோரியா மாநிலத் தலைநகருக்கு சற்று தொலைவில் உள்ளூர் நேரப்படி 09:15 மணிக்கு குறித்த நிலநடுக்கம் பதிவாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த நிலநடுக்கம் காரணமாக பலத்த சேதங்கள் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை என்பது மிகவும் நல்ல செய்தி என பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலநடுக்கம் அண்டை நாடான தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்திலும் உணரப்பட்டது.

அதைத் தொடர்ந்து 4.0 மற்றும் 3.1 ரிக்டர் அளவிலான இரண்டு நில அதிர்வுகள் ஏற்பட்டன என்றும் அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. சமீபத்திய ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய நிலநடுக்கங்கள் ஒன்றாக இது இருந்தாலும், குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.




# தடுப்பூசிகளை ஏற்றுமதிசெய்யும் இந்தியாவின் முடிவுக்கு உலக சுகாதார அமைப்பு வரவேற்பு

உபரியாக இருக்கும் தடுப்பூசிகள் அடுத்த மாதம் முதல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற் றுக்கு உச்சத்துக்கு வந்த சமயத்தில் வெளிநாடுகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு நிறுத்தி வைத்தது.

தற்போது தொற்று பாதிப்புக் குறைந்துள்ளதாலும் தடுப்பூசி உற்பத்தி அதிகரித்துள்ளதாலும், இந்தியா தன்னிடம் உள்ள உபரி தடுப்பூசிகளை மீண்டும் ஏற்றுமதி செய்யவுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மான்சுக் மாண்ட்வியா நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

மத்திய அரசின் இந்த அறிவிப்புக்கு உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி மருத்துவர் சௌமியா சுவாமிநாதன் வரவேற்பு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், இந்தியாவின் தடுப்பூசி ஏற்றுமதி அறிவிப்பை உலக சுகாதார நிறுவனம் வரவேற்கிறது. உலகளாவிய தடுப்பூசி வழங்கலில் சமநிலையை அடைய இது உதவும், எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 'மேட் இன் தமிழ்நாடு' என பொருள்கள் உற்பத்தியாகவேண்டும் ஏற்றுமதி மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை




'மேட் இன் இந்தியா' என்பதுபோல 'மேட் இன் தமிழ்நாடு' என்ற அடிப்படையில் இனி நாம் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும், என்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் இன்று நடைபெற்ற 'ஏற்றுமதியில் ஏற்றம் - முன்னணியில் தமிழ்நாடு' என்ற மாநாட்டில் கலந்துகொண்ட தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டிற்கான ஏற்றுமதிக் கொள்கையை வெளியிட்டதில் பெருமையடைகிறேன். மாநில ஏற்றுமதி மேம்பாட்டுக்குழு தலைமைச்செயலாளர் தலைமையில் விரைவில் அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஏற்றுமதியாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் அனைத்து ஆதரவுகளையும் தமிழக அரசு வழங்கும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி இந்தியா முழுவதும் பரந்துள்ளது. உலகம் நோக்கி நாம் செல்ல வேண்டும் உலகம் நம்மை நோக்கி வர வேண்டும். இந்தியாவிலேயே ஏற்றுமதியில் சிறந்த மாநிலங்களுக்கான பட்டியலில், ரூபா.1.93 லட்சம் கோடி ஏற்றுமதியுடன் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது. தொழில்துறையிலும் தமிழ்நாடு முன்னணியிலேயே இருக்கிறது. அகில இந்திய அளவில் தமிழகத்தின் பங்களிப்பு 8.97 வீதம் என இருக்கிறது.

மோட்டார் வாகன உற்பத்தியிலும் தமிழ்நாடு முன்னிலை வகித்து வருகிறது. ஆடை மற்றும் அணிகலன் ஏற்றுமதியில் 58வீதம், காலணி ஏற்றுமதியில் 45வீதம் பங்களிப்பு, மின்னனு சாதனங்களில் ஏற்றுமதியில் 25 வீதம் பங்களிப்பு என்று தமிழகம் இருப்பது மிகவும் பெருமையாக இருக்கிறது. இந்தவெற்றி, ஒவ்வொருதமிழனின் உழைப்புக்கும் கிடைத்த வெற்றி. இந்த வெற்றியோடு நாம் திருப்தி அடைந்துவிடக்கூடாது. இந்த விழுக்காடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக்கிக்கொண்டே செல்ல வேண்டும்.

தமிழ்நாட்டின் தனித்தன்மையான பொருள்களுக்கு உலக அளவில் நல்ல வரவேற்பு உள்ளது. ஆகவே வியாபாரிகள் இனி உலக வர்த்தக சந்தையின் சூழலுக்கேற்ப மதிப் புகூட்டு பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். 'மேட் இன் இந்தியா' என்பது போல இனி 'மேட் இன் தமிழ்நாடு' என்றும் வரவேண்டும். தற்போது காஞ்சிபுரம், ஆரணி, சின்னாளப்பட்டி சேலைகள் உட்பட புவிசார் குறியீடுபெற்ற பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிக வரவேற்பு கிடைத்து வருகிறது. பஞ்சு மீதான சந்தை நுழைவு வரி நீக்கப்பட்டுள்ளதால் அத்துறையில் புதிய முதலீடுகள் வரத்தொடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் மின்துறை சார்ந்த பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த ஏற்றுமதி மாநாட்டில், ஏற்றுமதிதொடர்பான கண்காட்சியும் நடைபெறுகிறது. இந்தக் கண்காட்சியில் பொதுமக்களுக்கு பிற்பகலில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் ஏற்றுமதி கையேடு வெளியிடப்பட்டுள்ளது. முதல்வருடன் இந்த மாநாட்டில் அமைச்சர்கள், அதிகாரிகள், வர்த்தக நிறுவன நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.



## இந்திய விமானப்படைக்கு புதிய தளபதி பாதுகாப்புத்துறை அமைச்சகம் தகவல்

இந்திய விமானப்படையின் தளபதியாக செயற்பட்டு வரும் ஆர்.கே.எஸ். பதாரியாவின் பதவிக் காலம் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இந்தநிலையில், தொடர்பாக விமானப் படையின் புதிய தளபதி நியமனம் குறித்து மத்திய அரசு அதிகாரப்பூர்வ தகவலை வெளியிட்டுள்ளது.

அதன்படி, விவேக் ராம் சவுதாரி இந்திய விமானப் படையின் புதிய தளபதியாக நியமனம் செய்யப்பட உள்ளார் என்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விமானப்படையின் துணைத் தளபதியாக இருக்கும் விவேக் ராம் சவுதாரி விமானப்படையின் தளபதியாக விரைவில் பொறுப்பேற்கவுள்ளார்.

## பஞ்சாப் மாநிலத்தில் முதல்வராக

# சரண்ஜித் சிங் சன்னி முதல்வராக பதவியேற்பு!



பஞ்சாப் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்த அமரிந்தர் சிங் தனது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து,

சட்டசபை காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக சரண்ஜித் சிங் சன்னி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் அமரிந்தர் சிங் அமைச்சரவையில் தொழில் கல்வித்துறை அமைச்சராக பதவி வகித்த தலித் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பஞ்சாப் மாநிலத்தின் முதல் தலித் இன முதலமைச்சர் என்ற சிறப்பைப் பெறுகிறார்.

பஞ்சாப் மாநிலத்தின் முதல் மந்திரியாக சரண்ஜித் சிங் சன்னிக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் நேற்றுக் காலை பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். சுக்ஜிந்தர் சிங் ரந்தவா மற்றும் ஓம் பிரகாஷ் சோனி ஆகியோர் துணை முதலமைச்சர்களாகப் பதவி ஏற்றுக்கொண்டனர். இந்த விழாவில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர் ராகுல் காந்தியும் கலந்து கொண்டார்.

முதல்வராகப் பதவியேற்றுக் கொண்ட சரண்ஜித் சிங் சன்னிக்கு இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மக்களின் நலனுக்காக தொடர்ந்து பஞ்சாப் அரசுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் என்று அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துக்கு நன்றி தெரிவித்துள்ள சரண்ஜித் சிங், மத்திய அரசு வேளாண் சட்டங்களை இரத்துச் செய்ய வேண்டும் என பிரதமர் மோடிக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

# மற்றொரு காஷ்மீராக அசாம் மாறப்போகிறது

## ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தில் மாநில முதல்வர் பேச்சு

'அசாம் மற்றொரு காஷ்மீராக மாறப்போகிறது' என்று ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் நடந்த கூட்டத்தில் அந்த மாநில முதல்வர் ஹிமந்தா பிஸ்வா ர்மா தெரிவித்திருக்கிறார். அசாம் மாநிலத்தில் ஹிமந்தா பிஸ் வார்மா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. முதல்வர் ஹிமந்தா பிஸ்வா, சில்சார் நகரில் உள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில், ''அசாம் மற்றொரு காஷ்மீராக மாறப்போகிறது. சில தரப்பினரின் ஆக்கிரமிப்பால் சத்ரா சமூக மக்கள் பெரும் ஆபத்தில் உள்ளனர். தேயிலைத் தோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் தொலைதூர எல்லைப் பகுதிகளில் வாழும் இந்துக்களும் ஆக்கிரமிப்புக் காரணமாக அழிவின் விளிம்பில் உள்ளனர்.



இவர்களைக் காப்பாற்ற ஆர்.எஸ்.எஸ். பகுதிவாரியாகச் சென்று இந்துக்களை ஒருங்கிணைக்க வேண்டும். சாதாரண மக்களுடன் வலுவான பிணைப்பு இருப்பதால் ஆர்.எஸ்.எஸ். அதைச் செய்ய முடியும். சமீபத்தில் என்னைச் சந்தித்த புத்த மதகுருக்கள், பெங்காலி இந்துக்களால் அசாமிய சமூகத்திற்கு அச்சுறுத்தல் இல்லை என்று தெரிவித்தனர். அசாம் மக்கள் இப்போது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ளனர் என்று அவர் தெரிவித்திருக்கிறார். இவரது கருத்துகள் மக்களிடையே பேதத்தை வளர்த்து வன்மத்தைத் தூண்டும் வகையில் இருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.



# கிராம உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக கொடுப்பனவை வழங்குக

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்து

சுகாதார பரிசோதர்களுக்கு வழங்கப்படுவது போன்று கிராம சேவகர்களுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்–

இலங்கையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உண்மையிலேயே இன்று இந்த கொரோனா சூழல்நிலையை எடுத்துக் கொண்டால், இலங்கையில் வடக்கு, கிழக்கு என்ற மாகாணங்களிலேயே உண்மையில் கொரோனா தொற்று நோயாளர்களுடைய எண்ணிக்கையும், மரணங்களுடைய எண்ணிக்கையும் மிகவும் குறைவாக உள்ளது.

அந்தவகையில் குறித்த மாகாணங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சுகாதார துறையினரை சேர்ந்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று உண்மையிலேயே பேசப்படாத ஒரு பிரிவினராக காணப்படும் கிராமசேவகர்கள் பற்றியும் நாங்கள் பேசவேண்டும். அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், சுகாதார பரிசோதர்களுக்கு வழங்கப்படுவது போன்று கிராமசேவகர்களுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

இலங்கையில் கடந்த ஒரு மாதகாலமாக பயணத்தடை அமுல்படுத்தப் பட்டுள்ளது. பஸ்கள், ரயில்கள் பயணிக்காத பயணத்தடையாகவே இது காணப்படுகின்றது. ஏனைய அனைவரும் வீதிகளில் பயணிக்கின்றனர். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கிண்ணியாவில் விபத்து ஒருவர் பரிதாபமாக பலி

கிண்ணியா பிரதான வீதி, வில்வெளி என்ற இடத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:–

விபத்தில் உயிரிழந்த நபர் கிண்ணியாவை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது, கிண்ணியாவில் இருந்து மணல் ஏற்றி தென் பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த டிப்பர்வாகனம் ஒன்று மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும் இந்தச் சம்பவம் குறித்து, கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆசிரியர் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் முன்வரவேண்டும்

## மட்டு. மாவட்ட பல்சமய ஒன்றியம்



ஆசிரியர்களின் பிரச்சினைக்கான தீர்வு காணப்பட்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு வழியேற்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பில் மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றி மாணவர்களின் கற்றல் செயற் பாடுகளுக்கு வழியேற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டது. ஆசிரியர்களை மன உழச் சலுக்கு உள்ளாக்காமல் அர சாங்கம் விரைவாக ஆசிரி–யர்களின் பிரச்சினைக்கு தீர்வினை வழங்கவேண்டும் எனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.



# ஓட்டமாவடி ஆற்றில் மிதந்து வரும் மிருகக் கழிவுகளும், குப்பைகளும்

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட ஓட்டமாவடி பகுதி ஆற்றங்கரையை சிலர் நாசப்படுத்திச் செல்கின்றமை மீனவர்களையும் ஆற்றோரம் வசிப்பவர்களையும் பாதிப்படையச் செய்கிறது.

இந்த ஆற்றில் யாருக்கும் தெரியாமல் சிலர் மிருகக் கழிவுகளையும் குப்பைகளையும் வீசிச் செல்வதால் ஆற்றை நம்பி மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடும்போது, வலைகளிலும் தூண்டில்களிலும் மிருகக் கழிவுகளும் குப்பைகளும் சிக்கிக் கொள்கின்றன என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் அவர்களது பெறுமதியான வலைகள் சேதமடைகின்றன.

அத்துடன், ஆற்றில் தொட்டிகள் அமைத்து மீன் வளர்ப்பு மேற்கொள்வதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. மீன் தொட்டிகளில் குப்பைகள் அகப்பட்டு தொட்டிகள் சேதமடைகின்றன என்று மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

குப்பைகளும், மிருகக் கழிவுகளும் இவ்வாறு ஆற்றில் வீசப்பட்டு கிடப்பதால் துர்நாற்றம் காரணமாக தாம் மிகவும் சிரமப்படுவதாக கரையோர மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான சூழலில் தாம் சிறுவர்களையும், வயதானவர்களையும் வைத்துக் கொண்டு சுவாசிக்க சிரமப்படுகிறோம் என்று கரையோர மக்கள் மேலும் தங்களது கவலைகளை வெளிப்படுத்துகின்றனர்.

இதனால் காலப்போக்கில் சுவாச நோய் உட்பட பல்வேறு நோய் தொற்றுக்கு உள்ளாகி விடுவோமோ என்று நாங்கள் அச்சப்படுகிறோம் என்று பாதிப்படைந்துள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த ஆற்றில் ஒவ்வொரு நாளும் மாடு, கோழி ஆகியவற்றின் கழிவுகள் மிதந்து வருகின்றன. அத்துடன் குப்பைகளும் மூடை மூடையாக மிதந்து வருகின்றன.

இத்தகைய கீழ்மைத்தனமான நடவடிக்கைகள் குறித்து, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தபோது, மக்களின் பாதுகாப்புக்காக வேண்டி மண்ணரிப்பை தடுக்க, அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த பகுதியில் யாரும் குப்பைகள் போட வேண்டும் என்றும் காட்சிப் பலகையும் போடப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன், குறித்த பகுதிகளில் ஒவ்வொரு நாளும் திண்மக் கழிவுகளை அகற்றும் இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுகின்றன. அதே போன்று மாட்டு இறைச்சிக் கடை, கோழி இறைச்சிக் கடைகளின் கழிவுகளை முறையாக அகற்றுவதற்கு இயந்திரம் ஒன்றும் ஒவ்வொரு நாளும் சேவையில் ஈடுபடுகின்றது. இவ்வாறான வசதிகளை எமது பிரதேச சபை செய்து கொடுத்தும் அதனை சிலர் மீறிச் செயற்படுவது வேதனையளிக்கிறது என்றும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# விவாசாய மாதிரி கிராம திட்டத்தின் கீழ் நுண் நீர்பாசன தொகுதிகள் வழங்கல்



கிழக்கு மாகாண காலநிலைக்கு சீரமைவான விவசாய நீர்ப்பாசன திட்டத்தினால் உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் விவசாய அமைச்சால் நடைமுறைப் படுத்தப்படும் விவாசாய மாதிரி கிராம திட்டத்தின் கீழ் நுண் நீர்பாசன தொகுதிகள் மற்றும் மாமரக் கன்றுகள் என்பன திருகோணமலை மொறவெவ, கோமரங்கடவல பிரதேசங்களில் பிரதேசத் தலைவர் டபிள்யு. பி. ஜெகத் குமார மற்றும் பிரதேசத் தலைவர் சந்தன விஜித குமார ஆகியோரால் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிழக்கு மாகாண காலநிலைக்கு சீரமைவான விவசாய நீர்ப்பாசனத் திட்ட பிரதி பணிப்பாளர் மற்றும் விவசாய திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வில் விவசாய போதனாசிரியர்கள் மற்றும் திட்டதின் கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விறுவிறுப்பான இறுதி ஓவர் ஆட்டம் பஞ்சாப்பை வீழ்த்தியது ராஜஸ்தான்




ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணியுடனான நேற்றைய போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

டுபாயில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப் பெடுத்தாட அழைக்கப்பட்ட ராஜஸ் தான் ரோயல்ஸ் அணி 20 ஓவர் கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 185 ஓட்டங்க ளைப் பெற்றுக்கொண்டது. ஜெய்ஸ்வால் 49 ஓட்டங்களையும் லொம்றொர் 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பஞ்சாப் கிங்ஸ் அணி யின் அர்ஷ்தீப் சிங் 5 விக்கெட்களையும் மொஹமட் சமி 3 விக்கெட்களை யும் வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலளித்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர் களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்று தோல் வியடைந்தது.

இறுதி ஓவரில் வெற்றிக்கு நான்கு ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்ட நிலையில், அற்புத மாக அந்த ஓவரை வீசிய கார்த் திக் தியாகி ஒரேயொரு ஓட் டத்தை மட்டும் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றி தனது அணிக்கு வெற்றியைப் பெற் றுக்கொடுத்தார். பஞ்சாப் கிங்ஸ் அணியின் மயங்க் அகர்வால் 67 ஓட்டங்களையும் அணித்தலைவர் கே.எல்.ராகுல் 49 ஓட்டங்களையும் எடுத்தனர். போட்டியின் ஆட்டநாய கனாக கார்த்திக் தியாகி தெரிவு செய்யப்பட்டார்.

நேற்றைய போட்டியில் பெற்ற வெற்றியால் கிடைத்த 2 புள்ளி களின் துணையோடு மொத்தமாக 8 புள்ளிகளைப் பெற்றுள்ள ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி ஐந்தாவது இடத்தில் உள்ளது.

## நியூஸிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது



இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே ஒரு நாள் போட்டித் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நிலையில், நியூஸிலாந்து அணி நிர்வாக உறுப்பினர் ஒருவருக்கு வந்த மிரட்டல் செய்தியில் அணியினர் தங்கியிருக்கும் விடுதியில் வெடிகுண்டு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நியூஸி லாந்து அணி நாடு திரும்பும்போது அவர் களது விமானத்திலும் வெடிகுண்டு வைக்கப்படும் எனவும் மிரட்டல் விடுக்கப் பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணிக்கு மிரட்டல் விடுத்து அனுப்பப்பட்ட மின்னஞ்சலை இங்கிலாந்து கிரிக்கெட் சபை பெற்றுள்ளது என்பதை நியூஸிலாந்து கிரிக்கெட் நிர்வாகமும் உறுதிப்படுத் தியுள்ளது. இதனையடுத்து நியூசிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணிக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கிரிக்கெட் தொடர் எவ்வித பாதிப்புகளுமின்றி நடைபெறும் என இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் தெரிவித்துள்ளன.

## தாமதமாக பந்து வீசிய ராஜஸ்தான் தலைவர் சாம்சனுக்கு ரூபா 12 லட்சம் அபராதம் விதிப்பு

பஞ்சாப் கிங்ஸ் அணிக் கெதிரான போட்டியில் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசாததால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி யின் தலைவர் சஞ்சு சாம்சனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் நேற்றைய போட்டியில் ராஜஸ் தான் ரோயல்ஸ் அணி 2 ஓட்டங் களால் பஞ்சாப் கிங்ஸ் அணியை வென்றிருந்தது. இந்தப் போட்டியில் இரண்டா வதாக பஞ்சாப் கிங்ஸ் அணி துடுப்பெடுத்தாடியபோது 20 ஓவர்களை வீசிமுடிக்க வரை யறுக்கப்பட்ட நேரத்தையும் கடந்து அதி கமாக எடுத்துக் கொண்டதால் ராஜஸ்தான் அணியின் தலைவர் சஞ்சு சாம் சனுக்கு இந்திய நாணய மதிப் பில் ரூபா.12 இலட்சம் அபராதம் விதிக் கப்பட்டுள்ளது.






## ஹைதராபாத் வீரர் நடராஜனுக்கு கொரோனா போட்டி திட்டமிட்டபடி நடைபெறுமென தகவல்

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் இன் றைய லீக் ஆட்டத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் விளை யாடவுள்ள நிலையில், ஹைத ராபாத் அணி வீரர் நடராஜனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவருடன் தொடர்பில் இருந்த விஜய் சங்கர் உட்பட 6 பேர் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளனர்.

வேகப்பந்து வீச்சாளர் நடராஜனுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள போதி லும் இன்றைய போட்டி திட் டமிட்டபடி நடைபெறும் என ஐ.பி.எல். நிர்வாகம் தெரிவித் துள்ளது.

# காணாமலாக்கப்பட்டோருக்கு மரண சான்றிதழ் ஜனாதிபதியின் கருத்துக்கு கஜேந்திரன் எதிர்ப்பு

ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய போது, அவருடைய இராணுவத்தில் சரணடைந்த பல்லாயிரக் கணக்காணவர்களுக்கு என்ன நடந்தது என்று உறவினர்கள் தேடிக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி இவ்வாறு கூறுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 12 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மறியல் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 29 ஆம் திகதி அவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், இவர்கள் 541 நாளகள் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணையின் கீழ் மிகக் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி. செல்வராசா கஜேந்திரன் சபையில் குற்றஞ் சாட்டினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, சிறைச்சாலையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளை ஓரிடத்துக்கு வருமாறு அழைத்து, அவருக்கு முன்பாக முழந்தாளில் இருக்குமாறு கட்டளையிட்டு, அச்சுறுத்தி அவர்களின் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டியுள்ளார்.

அதன்போது அவர், ஜனாதிபதி எனக்கொரு அதிகாரத்தை வழங்கியுள்ளார். அதன்படி விரும்பினால் உங்களை விடுதலை செய்யலாம். அல்லது சுட்டுக்கொல்லலாம் என்று கூறியுள்ளார். அவ்வாறு துப்பாக்கி வைத்து வெறியாட்டத்தை அவர் நடத்தியுள்ளார்.

அந்தக் கைதிகள் சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களே ஆவர்;. 2009 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ள அவர்கள் எவ்வித குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படவில்லை. அவர்களுக்குரிய வழக்குகளும் முறையாக நடத்தப்படுவதில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தினர் முறையாக ஆஜராகியிருந்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பர்.

வேண்டுமென்றே இவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தில் வைக்கப்பட்டுள்ளனர். இன்று இவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசாங்கமும், சட்டமா அதிபர் திணைக்களமும் பொறுப்பு ஏற்க வேண்டும். தமிழர் என்பதற்காக வேண்டுமென்றே செய்யப்பட்ட நடவடிக்கையாகும்.

லொஹான் ரத்வத்தவின் தவறுக்கு அவரின் மற்றைய இராஜாங்க அமைச்சு நீக்கப்படவில்லை. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அவரின் அனைத்து பொறுப்புகளும் பறிக்கப்பட்டு, அவரின் எம்.பி பதவியும் நீக்கப்பட வேண்டும். அத்துடன் அவரைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்து கின்றோம். 12 ஆம் திகதி சம்பவம் நடைபெற்ற நிலையில் 18 ஆம் திகதியே சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன். அந்த 6 நாள்களும் விசாரணைகளை தடுத்தவர்கள் யார் என்ற கேள்விகள் எழுகின்றன.

இதேவேளை கடந்த 26 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 12 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மறியல் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் 29 ஆம் திகதி இவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் 541 நாளகள் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணையின் கீழ் மிகக் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களிடம் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் ஊடாக வாக்குமூலம் பெற வேண்டும் என்ற போதும் அவ்வாறு இன்றியே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

அவ்வாறு இருந்து 540 நாள்களின் பின்னர் மறியல் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டவர்கள் மூன்று நாள்களின் பின்னர் மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றப்படும்போது நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் ஆண்குறி மற்றும் மல வாசல் என்பன மிகவும் கேவலமான முறையில் சோதிக்கப்பட்டுள்ளன. இதுவொரு பாலியல் சித்திரவதையே.

பயங்கரவாத தடுப்புப் பிரிவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், மறியல் சிறைச்சாலைக்கு மாற்றப்படும் போது போதைப் பொருள் இருக்கின்றது என்று சோதனை நடத்தப்படுகின்றது என்றால் எப்படி அவர்களால் அதனை கொண்டு சென்றிருக்க முடியும். அப்படியென்றால் அதிகாரிகள்தான் அதனைக் கொடுத்திருக்க வேண்டும்.

அதன்படி தினமும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களை வீதியில் வைத்து நிர்வாணமாக்கி சோதனையிட வேண்டும். அவ்வாறு செய்யாது கைதிகளை இப்படி நடத்துவது இது பாலியல் சித்திரவதை நடவடிக்கை என்று கூறுவதுடன், இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் கேட்கின்றோம்.

இதேவேளை ஜனாதிபதி ஐ.நா.



பொதுச் செயலாளரை சந்தித்த போது, காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழை வழங்குவதாக கூறியுள்ளார்.

இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய போது, அவருடைய இராணுவத்தில் சரணடைந்த பல்லாயிரக் கணக்காணவர்களுக்கு என்ன நடந்தது என்று உறவினர்கள் தேடிக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி இவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோன்று இந்த அரசாங்கம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பயங்கரவாத சட்டத்தை நீக்குவோம் என்று ஜெனிவாவில் வாக்குறுதியளித்திருந்தது.

ஆனால் அந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. அதனை நீக்க வேண்டும் என்று ஐ.நா. கூறியுள்ளது. இன்னும் அந்த சட்டத்தில் தடுத்து வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும். – என்றார்.

# 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு வடக்கில் தடுப்பூசி ஏற்றும் பணி

வடக்கு மாகாணத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், மன்னார் மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளின் முதல் கட்டமாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளின் முதல் கட்டமாக மன்னார், எருக்கலம்பிட்டி பெண்கள் பாடசாலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) சினோபாம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சினோபாம் தடுப்பூசி 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் இதுவரை எவ்வித தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் சினோபாம் கொரோனா தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதேபோன்று, வவுனியாவிலும் 20 தொடக்கம் 30 வரையானவர்களுக்;கான கொரானாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஐந்து தடுப்பூசி செலுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட்டு, தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், மரைக்காரம்பளை கிராம சேவையாளர் பிரிவில் உள்ளவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு, கணேசபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதற்கிடையில், யாழ்.வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 வயது தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள், நேற்று காலை 8 மணிமுதல் அம்பன் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# லொஹான் ரத்வத்த இதுவரை கைது செய்யப்படாதமை ஏன்?

## சிறிதரன் எம்.பி கேள்வி

மதுபோதையில் கைத்துப்பாக்கியுடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்த இதுவரையில் கைது செய்யப்படாதமை ஏன்? மனநோயால் பாதிக்கப்பட்ட நிலையில்தான் லொஹான் ரத்வத்த அந்த சிறைக்கு சென்றாரா? எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யான எஸ்.சிறிதரன் சபையில் கேள்வி எழுப்பியதுடன், இலங்கையில் இதுவரையில் இடம்பெற்ற சிறைச்சாலை படுகொலைகளுக்கு நீதி வழங்கபட்டதாக வரலாறு இல்லையெனவும், தமிழ் அரசியல் கைதிகளே இவ்வாறு இலக்கு வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 05 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 06 கட்டளைகள், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 03 ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைப் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2021இல் வெளியிடப்பெற்றது.